IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.

O.S. No.40/2018

Deposition of Witness for PW.1

Name : திரு. ராஜா
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 13.12.2024.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை தொடர்ச்சி

வாதி மேரிசெலினுக்கு அவரின் தாயார் வியாகம்மாள் எழுதிக்கொடுத்த இஷ்டதான பத்திரத்தின் சான்றிட்ட நகல் அ.சா.ஆ-1 (அசல் தான பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்று 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) ஜேசப் சிரில் என்பவரின் பெயரில் உள்ள 22.02.1992 தேதியிட்ட விலைபத்திரம் சான்றிட்ட நகல் வ.சாஆ.2. , 2ம் பிரதிவாதி அஸ்வின் குமாரியின் பெயரில் உள்ள செட்டில்மென்ட் பத்திரம் 01.07.2010 தேதியிட்ட ஒளிநகல் வா.சா.ஆ-3, 1ம் பிரதிவாதி ஜெயசேகரன் பெயரில் உள்ள விலை பத்திரம் 15.02.2011 தேதியிட்டது ஒளிநகல் வா.சா.ஆ-4, ( ஒளி நகல் என்பதால் 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) இரணியல் மாவட்ட உரிமையில் நீதிமன்றம் அ.வ.எண்.143/2013ன் வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ-5, அந்த வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சான்றிட்ட நகல் வ.சா.ஆ-6, வழக்கு பட்டிகை சொத்தினை காட்டும் புகைப்படம் 4 எண்ணம், சிடியுடன் கூடியது. வா.சா.ஆ.7( புகைப்படங்கள் வழக்கு பட்டிகை சொத்தினை குறித்ததா என்ற உறுதி செய்யமுடியாது என்று 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. வாதி பெயரில் உள்ள பட்டா வா.சா.ஆ.8, (ஒளிநகல்)( ஒளிநகல் என்பதால் 1ம் பிரதிவாதியின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. வாதி பெயரில் உள்ள தீர்வை ரசீது 13.10.2004 தேதியிட்டது வா.சா.ஆ.9 (ஒளிநகல்)( ஒளிநகல் என்பதால் 1ம் பிரதிவாதியின் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது) (மேற்படி ஒளிநகல்களின் அசல் அ.வ.எண்.143/2013ல் தாக்கல் செய்யப்பட்டதாக வாதி தரப்பில்

கூறப்பட்டு, பின்னிட்டு அந்த வழக்கிலும் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்ய வில்லை என்றும், வாதியின் வழக்கறிஞர் குறிப்பிடுகிறார்) எனது பெயரில் உள்ள 17.08.2023 தேதியிட்ட அதிகார பத்திரத்தின் அசல்.வா.சா.ஆ-10

பிராதுபடி தீர்ப்பாக வேண்டும் என வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.